# நற்றிணை செப்பும் பூக்களின் பருவ நிலைகள்

***கி. ஸ்ரீமதி***
இரண்டாமாண்டு முதுகலைபட்ட மாணவி, தமிழ்த்துறை
அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, வெட்டுக்காடு, சேந்தமங்கலம், நாமக்கல்
DOI: https://doi.org/10.5281/zenodo.13783866

***ஆய்வுச் சுருக்கம்***

*தமிழ் இலக்கிய உலகில் பல்வேறு நிலைகளில் ஆய்வுகள் நிகழ்ந்தாலும் ஓர் குறிப்பிட்ட காலகட்டத்தில் பூக்களின் பருவங்கள் இலக்கியத்தில் வெளிப்படுத்த இயலும். சங்க இலக்கியத்தை முன்வைத்து பூக்களைப் பற்றியும், பூக்களின் பருவங்களை பற்றியும் பூக்கள் எவ்வாறு அதன் தன்மையை வெளிப்படுத்தியதையும் குறிப்பிடுகின்றன. நற்றிணையில் பூக்களின் பருவங்களை பற்றியும், பூக்களின் ஏழு நிலைகளையும், மலர்களின் ஏழு நிலைகளிலும் பூக்கள் எப்படி விரியும் என்று குறிப்பிடுகின்றன. அந்த மலர்களின் பருவத்திற்கு ஏற்ப பெண்களின் பருவமும் இருக்கும். பூக்கள் ஆரம்பத்தில் பூக்கின்றது முதல் இறுதியில் வாடி விழும் வரை நடக்கும் பருவங்கள் பற்றி இக்கட்டுரையில் விரிவாக ஆராயப்பட்டுள்ளது.*

***கலைச்சொற்கள்:*** *நற்றிணை, பூக்கள், மலர், அரும்பு, மொட்டு.*

**முன்னுரை**

*எட்டுத்தொகை நூல்களுள் முதல் நூல் நற்றிணை ஆகும். நல்ல திணை என்னும் இதன் பொருள் ''நல்லொழுக்கம்'' எனப்படும். நானூறு பாடல்களை கொண்டமையால் நற்றிணை நானூறு என வழங்கப்படுகிறது. இந்நூலில் கருப்பொருளில் ஒன்றான பூக்களைப் பற்றி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.*

**நற்றிணையில் மலர்களின் பருவங்கள்**

1. *அரும்பு - அரும்பும் நிலை*
2. *மொட்டு - மொக்குவிடும் நிலை*
3. *முகை - முகிழ்க்கும் நிலை*
4. *மலர் - பூ நிலை*
5. *அலர் - மலர்ந்த நிலை*
6. *வீ - வாடும் நிலை*
7. *செம்மல் - இறுதிநிலை*

*இன்று மலர்களின் பருவத்தை இயலாக கூறியுள்ளார்.*

*நகை, முகை, மொக்குள், அரும்பு, மொட்டு, மலர், அலர், வீ செம்மல் என்று பரிணாம வளர்ச்சிக்கு ஏற்ப ஒவ்வொரு பெயரைத் தாங்கி நிற்கும் வளமான மொழி நம் தமிழ் மொழி. இப்படி பருவங்களுக்கு ஏற்ப பெயர் கொடுத்தும் அழைத்தும் எழுதியும் வந்த திறத்தால் தமிழ் வளமான மொழியாக இன்றும் இளமையாய் கன்னித்தமிழாய் வாடாமல் வாழ்ந்து கொண்டிருக்கிறது.*

*பூவின் இந்த ஏழு படிநிலையை உற்று நோக்கிய தமிழர்கள் மனிதர்களின் வளர்ச்சி பருவத்தையும், இதனை ஒட்டியே ஏழு பருவங்களாக அமைத்தனர். பெண்களுக்கு உரிய பருவங்களாக பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, பேரிளம், பெண் என்ற ஏழு பருவப் பெயர்கள் உள்ளன.*

**அரும்பு பருவம்**

*அரும்பு என்பது ஒரு செடி பூக்கும் பருவத்தில் முதலில் தோன்றுவது அரும்பு. இந்த அரும்பு பார்ப்பதற்கு மிகவும் சிறியதாக இருக்கும்.*

*அரும்பு கரு உருவாகும் காலம் என்றே கூறலாம். பூவாக பூப்பதற்கு அடிப்படை வடிவம் அரும்பக்கூடிய பருவமே அரும்புதல் பருவமாகும்.*

***"பனியரும்பு உடைந்த பெருந்தாள் புன்னை"***

***- (நற்.87:6)***

***"அரும்பெற மலர்ந்த கருங்கால் வேங்கை"***

***- (நற்.112:2)***

**மொட்டுப் பருவம்**

*அரும்பு சற்று பெரியதாக வளர்ந்த நிலையை மொட்டு என குறிப்பிடுகின்றோம். இந்த நிலையில் நறுமணம் உருவாகி இருக்கும்.*

**முகைப் பருவம்**

*மொட்டு சிறிது சிறிதாக விரியக் கூடிய நிலையில் இருக்கும் நிலை முகை. அதாவது முகிலுக்கும் நிலையில் உள்ளதால் முகை என்று கூறுகிறோம்.*

*முகை என்பது வளர்ச்சி பருவமாகும் அரும்பினுடைய அடிப்பக்கம் சற்று பருத்து முகைத்து காணப்படுவதால் இந்த பருவத்திற்கு முகைப் பருவம் என்று இலக்கியத்தில் "குளவி முகை" என்றும் "கொழுமுகை" என்றும் குறிப்பிடுகின்றது.*

*"குவிமுகை" என்பது அரும்பு உள் இடைவெளி பெற்றுக் குவிந்திருப்பது ஆகும். அதேபோன்று "கொழுமுகை" என்பது அரும்பினுடைய இதழ்கள் நெகிழ்ச்சி அடைந்து இருப்பதாகும். அரும்பு இடைவெளி விட்டு குவிந்து முனை கூர்மையாக இருப்பதால் இதற்கு "கூர்முகை" என்றும் குறிப்பிடுகிறது. இதனை,*

***"நுண்முகை யவழிந்த புறவில்" - (நற்.59:9)***

***"முல்லை முகவை திறப்பப் பல்வயின்"***

***- (நற்.69:5)***

*என்ற வரிகள் மூலம் அறியலாம். பலவகைப் பூக்களுக்கும் உரிய பலவகை முகைகளும் அதனுடைய வடிவங்களுக்கு ஏற்ப சிறிது வேறுபட்ட உருவ அமைப்புகளை உடையவையாகும். அவற்றினுள் முகையின் பெயர்களும் அமைந்துள்ளன.*

***முகை நனைக் கலிகை போகில்***

***முகுளமே மொக்குள் மொட்டு[1]***

*என்று குறிப்பிடுகிறது சூடாமணி நிகண்டு.*

**மலர் பருவம்**

*மொட்டுகள் முழுமையாக விரியும் நிலையை மலர் எனக் கூறுகிறோம். பேச்சு வழக்கில் இதனை பூ என குறிப்பிடப்படுகிறது. இது "மல்" என்ற வேர்ச்சொல்லின் இருந்து மலர் என்ற சொல் தோன்றியதாக கூறுகிறது. இதனை,*

***"போதவிழ் புன்னை ஓங்கிய கானல்"***

***- (நற்.327:7-8)***

***"அரும்பவிழ் அலரிச் சுரும்புண் பல்போது"***

***- (நற்.214 :4)***

*இதைப் போன்றே,*

***போது அவிழ் புதுமலர்[2]***

***பொதுவில் தளவம்[3]***

*என்று மதுரைக்காஞ்சி, ஐங்குறுநூறு பாடல் அடிகளை ஆராயும் போது மலர்களின் பருவங்கள் பற்றி தெரிய வருகிறது.*

***அலர்களே யவழிதல் விள்ளல்***

***மலர்தலா நெகிழ்த்தலும் போ[4]***

*இந்த வரியை ஆராயும் போது,*

*பூ என்பது மலர்களைக் குறிக்கும். இதற்கு அலர்தல், அவிழ்த்தல், விள்ளல், நெகிழ்ந்தல் என்னும் வேறு பெயர்களும் உண்டு. இதனை சூடாமணி நிகண்டு கூறுகின்றன.*

**அலர் பருவம்**

*இதழ்கள் நன்றாக விரிந்த நிலைதான் அலர். இந்த நிலையில்தான் பூவில் இருந்து தான் மகரந்தம் பரவுகிறது. பேச்சு வழக்கில் பூ நல்லா விரிஞ்சிருக்கு என்று கூறுகிறோம். இந்த நிலையில் தான் மகரந்தங்கள் வெளியேற்றப்பட்ட வேறு ஒரு பூவின் மகரந்தங்கள் மகரந்த சேர்க்கையின் மூலம் சூலகத்தை அடைந்து அதை கருவூர செய்கின்றன. மலரின் அடுத்த நிலையை விரி நிலை மலர் பருவத்தில் கட்டவிழிந்து விலகித் தனித்தனியே நின்ற இதழ்கள், இந்த பருவத்தில் நன்கு விரிந்து சற்று கீழ்நோக்கி வளைந்து பரவும் இந்த நிலைக்கு விரி பருவம் என்று பெயர். இவ்விதழ்கள் நன்றாக விரிதலும் பரவலும் அலர்தல் என்று சொல்லப்படுகின்றன. இந்த பருவத்தைப்*

*பற்றி நற்றிணை பாடல் வரிகள்,*

***"சுரும்புன விரிந்த கருங்கால வேங்கை"***

***- (நற்.168 :1)***

***"விரிபூங் காணல் ஒருசிறை நின்றோய்"***

***- (நற்.155:3)***

*என்று கூறுகின்றன. இதனை அடுத்து சூடாமணி நிகண்டு,*

***"இலகிய விரிமலர்ப்பேர்***
***இகமலர் வெதிர் தொடர்ப்பூ"***

*என்றும் குறிப்பிடுகின்றன.*

**வீ பருவம்**

*மிகவும் மலர்ந்த பூக்கள் ஓரிரு நாட்கள் கழித்து வாடும் நிலையில் இருந்தால் வீ என்று பெயர் அதாவது வீ என்பதற்கு வீழ்தல் என அர்த்தமாகும்.*

*"வீ" என்பதற்கு நீங்குதல், விழுதல், ஒழிதல், விடுதல் என பொருள் உண்டு. "பொதுவாக பூவின் இதழ்கள் வீழ்ந்தாலும் கருவுற்ற சூலகம் புதிய வீரியத்தோடு வளர ஆரம்பிக்கும் நிலையை வீ உணர்த்துகிறது" என இராமகிருஷ்ணன் குறிப்பிடுகிறார். முழு மலராக இருந்த விரிமலர், காம்பினுடைய பிடியிலிருந்து விழும் நிலையில் நீங்கும், விடுபடக்கூடிய நிலையில் ஒட்டிக் கொண்டிருக்கும். இதனை,*

***"வேங்கை வீபுகு" (நற்.13:7)***

***"வீதா வேங்கை மலைகிழ வேற்கே" (நற்.51 : 11)***

***"புன்னை வீமலர் உதிர்ந்த தேனாறு புலவின்"***

***(நற்.76: 6-7)***

*என்ற பாடல் வரிகள் குறிப்பிடுகின்றன.*

***கழன்று உகுவீ***

*என்ற வரிகள் விரிமலர் காம்பினின்று கழன்று கீழே விழும் நிலையில் உள்ளதை உணர்த்துகின்றன.*

**செம்மல் பருவம்**

*பூ கீழே விழுந்த உடன் வாடி வதங்கும் நிலைக்கு சென்றால் செம்மல் எனப் பெயர்.*

*மலர் உதிர்ந்து கீழே விழுந்த மலர் "செம்மல்" எனப்பட்டது.*

***புதுப்பூஞ் செம்மல்[7]***
***மென்பூஞ் செம்மல்[8]***

*என்று சிறுபாணாற்றுப்படை நூலும் மதுரைக்காஞ்சியும் செப்புகின்றன.*

*மலர்வாடி கீழே உதிர்ந்த மலர்களைச் சாம்பல் என்ற பெயரால் கூறுகின்றன. இதனை,*

***ஆம்பர் பூவின் சாம்பலன்[9]***

*என்ற குறுந்தொகை அடிகளால் அறியலாம். அவ்வாறு இலக்கியத்தின் வழியே பூக்களின் வளர்ச்சி நிலையை அறிய முடிகிறது.*

**முடிவுரை**

*எட்டுத்தொகை நூலான நற்றிணை நல்ல திணை நல்லொழுக்கம் எனப்படும்.*

*மலர்களின் பருவங்கள் ஏழு வகையான பருவங்களை வரிசைப்படுத்தி கூறியுள்ளனர்.*

*நற்றிணையில் பூக்களின் பருவங்களுக்கு ஏற்ப பெண்களின் பருவத்தையும் பூக்களின் பருவத்தையும் ஒப்பிட்டு பூக்களின் பருவத்தை வரிசைப்படுத்தி உள்ளதை இக்கட்டுரையில் அறிய முடிகிறது.*

**சான்றெண் விளக்கம்**


1. *கோவை இளஞ்சேரன், சூடாமணி நிகண்டு, ப.48.*
2. *நாகராசன் வி.முனைவர் (உ.ஆ), மதுரைக்காஞ்சி, பா.564, ப.22.*
3. *தட்சிணாமூர்த்தி. அ. முனைவர் (உ.ஆ), ஐங்குறுநூறு, பா.412.*
4. *கோவை இளஞ்சேரன், சூடாமணி நிகண்டு, ப.50.*
5. *மேலது.,*
6. *பாலசுப்பிரமணியன். கு.வே. முனைவர் (உ.ஆ), புறநானூறு, பா.307, ப.673.*
7. *மோகன்.இரா முனைவர் (உ.ஆ), சிறுபாணாற்றுப்படை, பா.வ.5, ப.137.*
8. *மோகன். இரா முனைவர் (உ.ஆ), மதுரைக்காஞ்சி, பா.வ.685, ப.26.*
9. *நாகராசன்.வி.முனைவர் (உ.ஆ), குறுந்தொகை பா.46, ப.122.*

**துணை நூற்பட்டியல்**

1. கோவை இளஞ்சேரன், சூடாமணி நிகண்டு, சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர், முதற்பதிப்பு - ஜனவரி 1999.
2. நாகராசன்.வி முனைவர் (உ.ஆ), குறுந்தொகை, நியூசெஞ்சுரி புக்ஹவுஸ் (பி) லிட், 41-பி, சிட்கோ இண்டஸ்ரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை.
3. தட்சணாமூர்த்தி அ முனைவர், ஐங்குறுநூறு, நியூசெஞ்சுரி புக்ஹவுஸ் (பி) லிட், 41-பி, சிட்கோ இண்டஸ்ரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை.
4. பாலசுப்பிரமணியன்.கு.வெ முனைவர்- புறநானூறு, நியூசெஞ்சுரி புக்ஹவுஸ் (பி) லிட், 41-பி, சிட்கோ இண்டஸ்ரியல் எஸ்டேட் அம்பத்தூர், சென்னை.
5. மோகன்.இரா முனைவர் (உ.ஆ), பத்துப்பாட்டு, நியூசெஞ்சுரி புக்ஹவுஸ் (பி) லிட், 41-பி, சிட்கோ இண்டஸ்ரியல் எஸ்டேட் அம்பத்தூர், சென்னை.